அனுப்புநர்
திரு.M.A.ஹபீபுர் ரஹ்மான்.,
நகர்மன்ற தலைவர்,
கடையநல்லூர் நகர்மன்றம்,
கடையநல்லூர்.

பெறுநர்
திரு / திருமதி.
நகர்மன்ற உறுப்பினர்
வார்டு எண்.
கடையநல்லூர் நகர்மன்றம்.

அன்புடையீர்,

கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். மேற்படி கூட்டப் பொருள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்திற்கு தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்,
கடையநல்லூர் நகர்மன்றம்.

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்– 2022ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட்டவுள்ள கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

**தலைமை: திரு.M.A.ஹபீபுர் ரஹ்மான் அவர்கள்.**

**பொருள் எண்.1**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆ1, நாள்.01.04.2022 மற்றும் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.15 நாள்.11.04.2022ன்படி இந்நகராட்சியில் சொத்துவரி மற்றும் காலிமனைவரி சீராய்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட சுற்றறிக்கையில் கீழ்க்கண்ட படிவங்கள், கீழ்க்கண்ட நிறங்களில் அச்சடித்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | படிவத்தின் விபரம் | நிறங்கள் விபரம் |
|---|---|---|
| 1. | சொத்துக்களின் உரிமையாளர்களிடமிருந்து சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவம் குடியிருப்பு கட்டிடங்கள் | இளம் நீல நிறம் |
| 2. | வணிக பயன்பாடு கட்டிடங்கள் | இளஞ் சிவப்பு நிறம் |
| 3. | தொழிற்சாலை கட்டிடங்கள் | வெள்ளை நிறம் |
| 4. | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | இளம் பச்சை நிறம் |
| 5. | காலிமனைவரி | இளம் மஞ்சள் நிறம் |

மேலும் மேற்கண்ட படிவங்கள் அச்சடிப்பது தொடர்பாக கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | படிவத்தின் விபரம் | எண்ணம் | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்விஸ் இண்டஸ்டிரியல் சொசைட்டி லிமிடெட் I nd 12/Try 25A சுந்தர தாஸ் டேங்க் தெரு திருச்சிரப்பள்ளி தொகை ரூ. | கோவில்பட்டி பிரிண்டர்ஸ் சர்விஸ் இண்டஸ்டிரியல் கோ.ஆட்ரேட்டிங் சொசைட்டி லிமிடேட் Ind No.1872 46/10 முத்தானந்தாபுரம் முதல் தெரு, கோவில்பட்டி. தொகை ரூ. |
| 1. | குடியிருப்பு கட்டிடம் | 100 | 250 + 45 = 295 | 248 + 45 = 293 |
| 2. | வணிக கட்டிடம் | 100 | 250 + 45 = 295 | 248 + 45 = 293 |
| 3. | தொழிற்சாலை | 100 | 250 + 45 = 295 | 248 + 45 = 293 |
| 4. | சுயநிதி பள்ளிகள் மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 100 | 250 + 45 = 295 | 248 + 45 = 293 |
| 5. | காலிமனைவரி | 100 | 250 + 45 = 295 | 248 + 45 = 293 |
| 6. | வரிவிதிப்பு கணக்கீட்டு படிவம் | 100 | 250 + 45 = 295 | 248 + 45 = 293 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள **(கோவில்பட்டி பிரிண்டர்ஸ் சர்விஸ் இண்டஸ்டிரியல் கோ.ஆட்ரேட்டிங் சொசைட்டி லிமிடேட் I nd No.1872 கோவில்பட்டி)** நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட படிவங்கள் மற்றும் இதர பதிவேடுகள் அச்சடிப்பதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.300000/–ம் மற்றும் சொத்துவரி சீராய்வின் முக்கியத்துவம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.900/2022/அ1)**

**தீர்மானம் எண்:–47**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள உத்தரவுகளின் படி இந்நகராட்சியில் சொத்துவரி (ம) காலிமனை வரியினை 01.04.2022 முதல் பொதுச் சீராய்வு செய்வதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.15 நாள்.11.04.2022ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பொதுச்சீராய்வு தொடர்பான அறிக்கையினை தமிழ்நாடு அரசு மாவட்ட அரசிதழில் வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ள அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.60000/– அறுபதாயிரத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.900/2022/அ3)**

**தீர்மானம் எண்:–48**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனமான பேருந்து நிலைய நுழைவுக்கட்டணம் 31.03.2021 ல் மூன்றாண்டுகள் முடிவடைந்து அதன்பின்னர் ஏலம் போகாததால் தொடர்ந்து 01.04.2021 முதல் அலுவலகம் மூலமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குத்தகை இனத்தின் மீது 01.04.2021 முதல் 31.03.2024 வரை குத்தகை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 02.02.2021. 12.02.2021, 23.02.2021, 21.06.2021, 01.07.2021, 27.07.2021, 13.08.2021, 03.09.2021, 23.09.2021, 16.12.2021, 31.12.2021 மற்றும் 25.03.2022 ஆகிய நாட்களில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட ஏலங்களில் 02.02.2021, 12.02.2021 மற்றும் 27.07.2021 ஆகிய நாட்கள் தவிர எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் மேற்கண்ட அனைத்து ஏலங்களிலும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. இதனை தொடர்ந்து மேற்கண்ட இனத்திற்கு பதிமூன்றாவது முறையாக 29.04.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் பின்வருமாறு

| வ. எண் | பெயர் (ம) முகவரி | டெபாசிட் தொகை செலுத்திய விபரம் | குத்தகை தொகை ரூ. ஒரு ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1. | திரு.கே.எம்.முகைதீன் பிச்சை,<br>த/பெ.முகம்மது இபுராகிம்,<br>263பி/ஏ. ரகுமானியாபுரம் 9ம் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் | ரூ.200000/–<br><u>TNGB DDNo.072401</u><br>28.04.2022 | ரூ.320000 |
| 2. | திரு.சமுத்திரவேல்,<br>த/பெ. ராம்ராஜ்,<br>50/50, தந்தை பெரியார் | ரூ.200000/–<br><u>TNGB DDNo.072402</u><br>28.04.2022 | ரூ.318000 |

| | | | |
|---|---|---|---|
| | தெரு,மாவடிக்கால், கடைநல்லூர் | | |

மேற்கண்ட கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.கே.எம்.முகைதீன் பிச்சை என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.320000/– கூடுதலாக உள்ளது. இத்தொகையானது ரூ.375000 + 393750 + 413438 = 1182188/3 = 394063/ – மூன்றாண்டு சராசரித் தொகையினை விட ரூ.74063/– குறைவாக உள்ளது.

மேலும் மேற்கண்ட குத்தகை இனம் ஏலம் எடுக்க முன்வராததால் 01.04.2021 முதல் தற்போது வரையிலும் அலுவலக பணியாளர்மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.அதன்படி 01.04.2021 முதல் 31.03.2022 வரை வசூல் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு

| வ.எண் | மாதம் | வசூல் தொகை |
|---|---|---|
| 1 | ஏப்ரல் 2021 | 62660 |
| 2 | மே 2021 | 8960 |
| 3 | ஜீன்2021 | 880 |
| 4 | ஜீலை2021 | 21224 |
| 5 | ஆகஸ்ட்2021 | 30784 |
| 6 | செப்டம்பர்2021 | 25480 |
| 7 | ஆக்டோபர்2021 | 24104 |
| 8 | நவம்பர்2021 | 26720 |
| 9 | டிசம்பர்2021 | 27056 |
| 10 | ஜனவரி2022 | 23400 |
| 11 | பிப்ரவரி2022 | 24752 |
| 12 | மார்ச்2022 | 27464 |
| | Total | 303484 |

மேலும் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம் ரூ.21601/– 12 மாதத்திற்கு ரூ.259212/–செலவிடப்படுகிறது. மேலும் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்படும் தொகை ரூ.303484/–ல் பணியாளர்கள் ஊதியம் ரூ.259212/–போக நகராட்சிக்கு வருவாயாக 44272/–மட்டுமே வருவாய் கிடைக்கப்பெறுகிறது. மேலும் இந்நகராட்சியில் குத்தகை இனத்திற்கு வசூல் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் தொடர்ந்து மேற்கண்ட குத்தகை இனத்தை நகராட்சி மூலம் வசூல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை ஒப்புநோக்கும் போது மேற்கண்ட வ.எண். 1 ல் கேட்கப்பட்ட குத்தகை தொகை கூடுதலாக உள்ளதால் திரு.கே.எம்.முகைதீன் பிச்சை என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.06.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.181 நாள்.19.09.2008ன்படி 2022–2023 ம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2024–2025ம் ஆண்டிற்கு குத்தகை தொகை வசூல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.4949/2020/சி2)

**தீர்மானம் எண்:–49**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

திரு.எஸ்.முருகன் என்பவர் இந்நகராட்சி வாரச்சந்தையில் உள்ள கடை எண்.33, 52ஐ இந்நகர்மன்ற தீர்மான எண்.533, 23.07.2021 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.1399/2013/அ3

நாள்.02.08.2021ன்படி 01.04.2021 முதல் 31.03.2024வரை உரிமம் பெற்று கடை நடத்தி வருகிறார். மேலும் அன்னார் 2021–2022ம் ஆண்டிற்கு குத்தகை தொகை ரூ.34,704/– செலுத்தாததால் அன்னாரின் வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டது.

மேற்படியாளர் 18.04.2022ம் தேதிய மனுவில் குடும்ப சூழ்நிலை காரணமாக கடையினை நடத்த இயலவில்லை எனவும் நிலுவையில் உள்ள வாடகைத் தொகையினை வைப்புத் தொகையில் ஈடு செய்தது போக மீதத்தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். வைப்புத் தொகை கணக்கு எண்.4018ல் அன்னாரது பெயரில் ரூ.50,000/–உள்ளது. 2021–2022ம் ஆண்டிற்கு ரூ.34704/–ஈடு செய்யப்பட்டது போக மீதித் தொகை ரூ.15296/– அன்னாருக்கு வழங்கவும் 01.04.2022 முதல் மேற்கண்ட கடையின் உரிமத்தினை ரத்து செய்து மறு ஏலம்விடவும் மேலும் ஏப்ரல்–2022 முதல் ஜீன் வரை மூன்று மாதங்களுக்கு வாடகை தொகை ரூ.7302/– அன்னாரது வைப்புத்தொகையில் ஈடு செய்து மீதத்தொகை ரூ.7994/–ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) ஏல நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக நகர்மன்ற ஒப்புதலினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1399 /2013/சி2)

**தீர்மானம் எண்:–50**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள தரைத்தளம் கடை எண்.1க்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.37 நாள்.12.03.2020ன்படி ரத்து செய்யப்பட்ட மேற்படி கடைக்கு 01.04.2022 முதல் 31.03.2025 வரை வாடகை உரிமை காலத்திற்கு 24.05.2022 அன்று பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (ம) முகவரி | வைப்புத் தொகை | மாத வாடகை ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.முகம்மது மைதீன்,<br>த/பெ.செய்யது அகம்மது,<br>44/119 பி, ரஹ்மானியாபுரம் 6ம் தெரு,<br>கிருஷ்ணாபுரம். | 150000/–<br><u>DDNo.135153</u><br>21.05.2022<br>IOB Bank<br>KDNR | 5520/– |
| 2. | திரு.அசார்,<br>த/பெ.முகம்மது இஸ்மாயில்<br>10ஜி ரஹ்மானியாபுரம் 4ம் தெரு,<br>கிருஷ்ணாபுரம். | 150000/–<br><u>DDNo.633952</u><br>21.05.2022<br>CUB- Bank<br>KDNR | 5400/– |

மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1ல் திரு.முகம்மது மைதீன் என்பவரின் உச்சபட்ச ஏலக்கேள்வி மாத வாடகை தொகை ரூ.5520/– கூடுதலாக உள்ளது. எனவே அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை முடிவு செய்து அன்னாருக்கு 01.07.2022

முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.181 நாள்.18.09.2008ன்படி கடைகளுக்கான குத்தகை உரிமம் 9 ஆண்டுகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் முடிவு செய்யலாம்.
2) மேற்கண்ட கடைக்கு 02.02.2021, 12.02.2021, 23.02.2021, 21.06.2021, 01.07.2021, 27.07.2021, 13.08.2021, 13.09.2021, 23.09.2021, 16.12.2021, 31.12.2021, 25.03.2022 மற்றும் 29.04.2022 வரை 13 தடவை பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லையாதலால் அன்னாரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை அனுமதிக்கலாம்.
3) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை.

(ந.க.எண். 4949 /2020/சி2)

**தீர்மானம் எண்:–51**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கடையநல்லூர் நகராட்சியில் 22.10.2018 அன்று தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.கா.சௌக்கத் அலி என்பவர் புளியங்குடி நகராட்சிக்கு பணியிட மாறுதல் வழங்க கோரி 20.12.2021ம் தேதி விண்ணப்ப செய்துள்ளார். தனியர் மீதான நிர்வாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை. எனவே திரு.கா.சௌக்கத் அலி, தூய்மை பணியாளரை கடையநல்லூர் நகராட்சியிலிருந்து புளியங்குடி நகராட்சிக்கு பணியிட மாறுதல் வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 5936 /2021/எச்1)**

**தீர்மானம் எண்:–52**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

கடையநல்லூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராக திரு.ஈ.செந்தில் குமார் என்பவர் 22.10.2018ம் முதல் பணிபுரிந்து வருகிறார். அன்னார் புளியங்குடி நகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரி 31.12.2021 அன்று விண்ணப்பித்துள்ளார். அன்னார் மீது துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவே திரு.ஈ.செந்தில் குமார் தூய்மை பணியாளரை புளியங்குடி நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 6134/2021/எச்1)**

**தீர்மானம் எண்:–53**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.P.திருப்பதி பாண்டி என்பவர் அன்னாரின் சுய விருப்பத்தின் பேரில் சாத்தூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரியுள்ளார். அன்னார் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எதும் இல்லை. எனவே திரு.P.திருப்பதி பாண்டி தூய்மை பணியாளரை சாத்தூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2221/2021/எச்1)**

**தீர்மானம் எண்:–54**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கழிவறைகளில் நச்சுத் தொட்டி நிறைந்துவிட்டதால் அதனை சுத்தப்படுத்த உள்ளாட்சி தேர்தல் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாநில நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவுத்தொகை ரூ.29000/–க்கு அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

**(ந.க.எண். 392/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–55**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN76AF 5635 மினி டிப்பர் லாரிக்கு தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு பழுதுகளை நீக்கம் செய்திடும் வகைக்கான உத்தேச செலவினம் ரூ.80000/–க்கும், மேற்படி பழுது நீக்கும் பணிக்கு தகுதிபெற்ற பணிமனைதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறவும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிய தொகை செலுத்தி தகுதி சான்றிதழ் பெற ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களால் 20.05.2022 முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1164/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–56**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகளிலும் களப்பணியாளர்களை தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யயும் பொருட்டு தகுதிவாய்ந்த நிறுவனத்தை தேர்வு செய்தல் பணிக்கு தி இந்து மற்றும் முரசொலி (தமிழ்நாடு பதிப்பு) நாளிதழ்களில் 10.07.2021ம் தேதியில் மறு ஒப்பந்தப்புள்ளி விளம்பர செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.99288/– மற்றும் சேவை வரிக்கட்டணம் ரூ.4964/– ஆக ரூ.104252/– கோவில்பட்டி நகராட்சி மூலம் மொத்தமாக செலுத்தப்பட்டது. அதில் கடையநல்லூர் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.5487/– கோவில்பட்டி நகராட்சிக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1130/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–57**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

கடையநல்லூர் நகராட்சியில் PM SVANidhi திட்டத்தின் கீழ் வட்டி மானியத்துடன் கடனுதவி பெற்ற நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல், தெருவோர வியாபாரத்தினை முறைப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம்–2015 திட்ட விதி எண்–7ன்படி பயோமெட்ரிக் விபரங்களுடன் தெருவோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/16/UPA2 நாள்.26.07.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு இந்நகராட்சியில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலங்களில் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 324 தெருவோர வியாபாரிகளுக்கு PM SVANidhi திட்டத்தின்கீழ் பல்வேறு வங்கிகளின் மூலம் கடனுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட 324 தெருவோர வியாபாரிகளுக்கு BIOMETRIC IDENTITY CARDS வழங்குவதற்கு ஏதுவாக விலைப்புள்ளிகள் பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மற்றும் அதற்குரிய மதிப்பீட்டுத் தொகை ரூ.96,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.19645/2016/UPA1 நாள்.20.01.2017ன்படி மேற்கண்ட பணிகளை, இந்நகராட்சிக்கு விடுவிக்கப்பட்ட ரூ.1,70,740/–லிருந்து மேற்கொள்ளலாம் (For the component of Support to Urban Street Vendors under DAY-NULM for the year 2016-17)
3. இந்நகராட்சியில் ஏற்கனவே SUSV திட்டத்தின் கீழ் 121 தெருவோர வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட BIOMETRIC IDENTITY CARDS டிசம்பர்–2020 அன்று காலாவதி ஆகிவிட்டது என்பது மன்றத்தின் தகவலுக்கு.

**(ந.க.எண். 2268 /2022/எப்1)**

**தீர்மானம் எண்:–58**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு. S.கந்தசாமி ஒப்பந்தகாரர் என்பவர் 2015–2016 மற்றும் 2016–2017ம் ஆண்டுகளில் ICDSதிட்டம் 2014–2015 மற்றும் வருவாய் தலைப்பு நிதியின் கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% மற்றும் 1% கூடுதல் வைப்புத்தொகைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எ ண் | பணியின் விபரம் | 5 % கூடுதல் வைப்புத் தொகை ரூ. | 1 % கூடுதல் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி முன் வைப்புத் தொகைரூ. | கிடைக்க பெறாத பணிகளின் ஒப்பந்தப்பு ள்ளி முன் வைப்புத் தொகைரூ. | மொத்தம் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – ICDSதிட்டம் 2014–2015ன் கீழ் | 28262/– | 6000/– | 6000/– | – | 40262/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வார்டு எண்.5 கிருஷ்ணன் கோவில் தெருவில் புதிய அங்கன் வாடி மையம் கட்டும் பணி. | | | | | |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.8 பாரஸ்ட் ஆபிஸ் அருகில் தடுப்பு சுவர் கட்டும் பணி | – | 2000/– | 2000/– | – | 4000/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.8 புதிதாக ரேசன் கடை கட்டும் பணி | – | 6000/– | 6000/– | – | 12000/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி – ICDSதிட்டம் 2014–2015ன் கீழ் வார்டு எண்.5 கிருஷ்ணன் கோவில் தெருவில் புதிய அங்கன் வாடி மையம் கட்டும் பணி. | – | – | – | 6000/– | 6000/– |
| 5. | கடையநல்லூர் நகராட்சி – ICDSதிட்டம் 2014–2015ன் கீழ் வார்டு எண்.29 மதினா நகர் பகுதியில் புதிய அங்கன் வாடி மையம் கட்டும் பணி. | – | – | – | 6000/– | 6000/– |
| | மொத்தம் | 28262/– | 14000/– | 14000/– | 12000/– | 68262/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1முதல் 5 வரை உள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் ,செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% மற்றும் 1% கூடுதல் வைப்புத்தொகைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகைகள் ரூ. 68262/–யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.68262/–யை திரு. S.கந்தசாமி ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. <u>மன்றம் அனுமதிக்கலாம்.</u>
2. வரிசை எண்.1முதல் 5வரை உள்ள பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இருப்பின் அதற்கான தடையினை பிடித்தம் செய்து விட்டு மீத்தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 4357/2021/இ1)**

**தீர்மானம் எண்:–59**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
கடையநல்லூர் நகர்மன்றம்